**டிசம்பர் – 19**

# TNPSC துளிகள்

- தற்போது துணை இராணுவத் தளபதியாக இருக்கும் லெப்டினன்ட் ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவனே இந்தியாவின் அடுத்த ராணுவத் தலைமைத் தளபதியாக நியமிக்கப் பட இருகின்றார்.
    - இந்த ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியன்று ஓய்வு பெற இருக்கும் இந்திய ராணுவத்தின் தலைமைத் தளபதியான ஜெனரல் பிபின் ராவத்திற்குப் பதிலாக இவர் பொறுப்பேற்க இருக்கின்றார்.
- ஜம்மு காஷ்மீரில் போர்களின் போது பாதிக்கப்பட்ட பெண்களால் தைக்கப்பட்ட 'காதி ரூமல்' என்பதன் விற்பனையை மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சர் நிதின் கட்கரி தொடங்கி வைத்தார்.
    - ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதே இதன் நோக்கமாகும்.
- நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களும் 2022 ஆம் ஆண்டிற்குள் அகலப் பட்டை கொண்ட அலைவரிசை வசதியைப் பெறுவதற்காக (இணைய வசதி) தேசிய அகலப் பட்டை அலைவரிசைத் திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.
    - இந்தத் திட்டமானது நாடு முழுவதும் உள்ள 6,00,000 கிராமங்களுக்கு இணைய வசதியைக் கொண்டு வருவதற்காக ரூ. 7 லட்சம் கோடி முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## உலகளாவிய பாலின இடைவெளிக் குறியீடு 2020

- 2020 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய பாலின இடைவெளிக் குறியீட்டில் மொத்தமுள்ள 153 நாடுகளில் இந்தியா 112வது இடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீடானது உலகப் பொருளாதார மன்றத்தினால் (WEF - World Economic Forum) வெளியிடப் பட்டுள்ளது.
- முதலாவது பாலின இடைவெளிக் குறியீடானது 2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- இந்தக் குறியீட்டில் அதிகபட்ச மதிப்பெண் 1 (சமத்துவம்) மற்றும் மிகக் குறைந்த மதிப்பெண் 0 (சமத்துவமின்மை) ஆகும்.

*முக்கிய அம்சங்கள்*

- ஐஸ்லாந்து (கிட்டத்தட்ட 88% அளவிற்கு நெருக்கமாக) தொடர்ந்து 11 ஆண்டுகளாக உலகளாவிய பாலின இடைவெளிக் குறியீட்டில் முதலிடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீட்டில் ஏமன் கடைசி இடத்தில் (153 வது) உள்ளது.
- அரசியல் அதிகாரமளிப்பதில் மிகப்பெரிய பாலின ஏற்றத்தாழ்வு உள்ளது.
- இந்தக் குறியீட்டின் கடந்த பதிப்பில் இந்தியா 108வது இடத்திலிருந்து 112வது இடத்திற்கு சறுக்கி உள்ளது.
- ஆய்வு செய்யப்பட்ட 153 நாடுகளில், அரசியல் பாலின இடைவெளியை (0.411) விட பொருளாதாரப் பாலின இடைவெளி (0.354) அதிகமாக இருக்கும் ஒரே நாடு இந்தியா மட்டுமேயாகும்.
- நான்கு குறிகாட்டிகளில் இந்தியாவின் செயல்திறன்:

- பொருளாதாரப் பங்கேற்பு மற்றும் வாய்ப்புகள் - 149வது இடம்
- கல்வித் திறனை அடைதல் - 112வது இடம்
- உடல்நலம் மற்றும் உயிர் வாழ்தல் - 150வது இடம்
- அரசியல் அதிகாரம் - 18வது இடம்.

GLOBAL GENDER GAP INDEX RANKINGS 2020

| Rank | Country | Score |
|---|---|---|
| 1 | Iceland | 0.877 |
| 2 | Norway | 0.842 |
| 3 | Finland | 0.832 |
| 4 | Sweden | 0.820 |
| 5 | Nicaragua | 0.804 |
| 6 | New Zealand | 0.799 |
| 7 | Ireland | 0.798 |
| 8 | Spain | 0.795 |
| 9 | Rwanda | 0.791 |
| 10 | Germany | 0.787 |
| 21 | United Kingdom | 0.767 |
| 50 | Bangladesh | 0.726 |
| 53 | United States | 0.724 |
| 81 | Russian Federation | 0.706 |
| 92 | Brazil | 0.691 |
| 101 | Nepal | 0.680 |
| 102 | Sri Lanka | 0.680 |
| 106 | China | 0.676 |
| 112 | India | 0.668 |
| 121 | Japan | 0.652 |
| 151 | Pakistan | 0.564 |
| 153 | Yemen | 0.494 |

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியா ஜெர்மனியிடமிருந்து கடன் பெறுதல்

- இந்தியா ஜெர்மனியிடமிருந்து 277 மில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ 1,900 கோடி) மதிப்பிலான கடனைப் பெற்றுள்ளது.
- நாட்டில் எரிசக்தித் திறன் கொண்ட வீட்டுவசதித் திட்டத்தை நிறுவ இந்தியா இந்தக் கடனைப் பயன்படுத்த இருக்கின்றது.
- இந்த திட்டமானது இந்திய - ஜெர்மன் மேம்பாட்டு ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக இருக்கும். இது 2030 ஆம் ஆண்டின் நிலையான வளர்ச்சி இலக்கின் செயல் திட்டத்தால் வழி நடத்தப்படுகின்றது.
- இந்த கடன் ஒப்பந்தமானது பாரத ஸ்டேட் வங்கி மற்றும் ஜெர்மனியின் KfW மேம்பாட்டு வங்கி ஆகியவற்றிற்கு இடையே கையெழுத்தானது.

## NEFT - 24x7

- வங்கி நேர நிதிப் பரிமாற்றத்திற்கு அப்பால் நிதிப் பரிமாற்றத்திற்காக வாரத்தின் ஏழு நாட்களிலும் 24 மணி நேரமும் தேசிய மின்னணு நிதிப் பரிமாற்ற (NEFT - National Electronic Funds Transfer) வசதியை இந்திய ரிசர்வ் வங்கி நீட்டித்துள்ளது.
- NEFT என்பது இந்திய ரிசர்வ் வங்கியால் பராமரிக்கப்படும் ஒரு மின்னணு நிதிப் பரிமாற்ற அமைப்பாகும்.

- இந்த முறையானது வங்கித் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தால் (Institute for Development and Research in Banking Technology - IDRBT) நிறுவப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றது.
- NEFT ஆனது ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு என்ற அடிப்படையில் NEFT வசதி செயல்படுத்தப்பட்ட இரண்டு வங்கிக் கணக்குகளுக்கு இடையில் மின்னணுச் செய்தி அனுப்புதல் மூலம் நிதியை மாற்ற வங்கி வாடிக்கையாளர்களுக்கு உதவுகின்றது.

## 7வது பொருளாதாரக் கணக்கெடுப்பு

- 7வது பொருளாதாரக் கணக்கெடுப்பு (Economic Census - EC) 2019 ஆம் ஆண்டில் பொதுச் சேவை மையங்களின் (Common Service Centres - CSC) மூலம் நாடு தழுவிய அளவில் நடத்தப் படுகின்றது.
- 7வது பொருளாதாரக் கணக்கெடுப்பானது மத்தியப் புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தின் கீழ் மத்தியப் புள்ளிவிவர அலுவலகம் (Central Statistics Office - CSO) என்ற அமைப்பால் நடத்தப் படுகின்றது.
- இந்தக் கணக்கெடுப்பு 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- பொருளாதாரக் கணக்கெடுப்பானது டிஜிட்டல் முறையில் நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.

### *இந்தியப் பொருளாதாரக் கணக்கெடுப்பு*

- பொருளாதாரக் கணக்கெடுப்பு என்பது நாட்டின் புவியியல் எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்துப் பொருளாதார அமைப்புகளின் ஒரு முழுமையான கணக்கெடுப்பு எண்ணிக்கையாகும்.
- இந்தியப் பொருளாதாரக் கணக்கெடுப்பானது முதன்முதலில் 1977 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- இதுவரை 1977, 1980, 1990, 1998, 2005, 2013 ஆகிய ஆண்டுகளில் 6 பொருளாதாரக் கணக்கெடுப்புகள் நடத்தப் பட்டுள்ளன.
- 1980 மற்றும் 1990 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட பொருளாதாரக் கணக்கெடுப்பானது மக்கள் தொகை கணக்கெடுப்போடு ஒருங்கிணைக்கப்பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பிரம்மோஸ் ஏவுகணை - சோதனை


- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது (Defense Research and Development Organisation - DRDO) "பிரம்மோஸ்" என்ற மீயொலி வேக ஏவுகணையை ஒடிசாவில் உள்ள சந்திப்பூரிலிருந்து சோதனை செய்தது.
- நடுத்தர தூர வரம்பு கொண்ட இந்த ஏவுகணையானது போர்க் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், நிலம் அல்லது போர் விமானங்களிலிருந்து ஏவப்படும் திறன் கொண்டது.
- இந்த ஏவுகணையானது இந்தியக் கடற்படை, ராணுவம் மற்றும் விமானப் படை ஆகியவற்றுடன் இணைத்து செயல்படுத்தப் படுகின்றது.
- நடுத்தர தூர வரம்பு கொண்ட பிரம்மோஸ் ஏவுகணைகளை இந்தியாவிடம் இருந்து வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதாக பிலிப்பைன்ஸ் உறுதி அளித்துள்ளது.

***பிரம்மோஸ் ஏவுகணை***

- ❖ பிரம்மோஸ் என்பது இந்தியாவின் DRDO மற்றும் ரஷ்யாவின் NPOM ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- ❖ இந்தியா MTCR என்ற ஒப்பந்தத்திற்குள் (ஏவுகணை தொழில்நுட்ப கட்டுப்பாட்டு வரம்பு - Missile Technology Control Regime) நுழைந்த பிறகு, பிரம்மோஸ் ஏவுகணையின் வரம்பை 600 கி.மீ. ஆக நீட்டித்துள்ளது.
- ❖ மேலும் அதிவேகமாகச் செயல்படும் ஏவுகணைகளில் இதுவும் ஒன்றாகும். இது 2.8 மாக் வேகத்தில் செயல்படும் திறன் கொண்டது. இது ஒலியை விட மூன்று மடங்கு வேகமானதாகும்.

## 2I / போரிசோவ் - விண்மீன்களுக்கிடைப்பட்ட ஒரு பொருள்

- ❖ சர்வதேச வானியல் ஒன்றியமானது (International Astronomical Union - IAU) சமீபத்தில் கண்டறியப்பட்ட வால்மீனை விண்மீன்களுக்கிடைப்பட்ட ஒரு பொருளாக அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது.
- ❖ தற்காலிகமாக வால்மீன் சி/2019 என்று அழைக்கப்படும் இந்தப் பொருள் இப்போது 2I /போரிசோவ் என அழைக்கப்படுகின்றது.
- ❖ விஞ்ஞானிகள் அடையாளம் கண்டுள்ள இரண்டாவது விண்மீன்களுக்கிடைப்பட்ட ஒரு பொருள் இந்த வால்மீன் ஆகும்.
- ❖ முதலாவது வால்மீனான 1I/ஒமுவாமுவா ஆனது 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் முதன்முதலில் காணப்பட்டது.
- ❖ 2I/போரிசோவ் ஆனது வேறு எந்த வால்மீனை விடவும் ஒரு மிகைப்படுத்தப்பட்ட பாதையைக் கொண்டுள்ளது.
- ❖ போரிசோவ் என்ற பெயரானது கிரீமியாவைச் சேர்ந்த அதன் கண்டுபிடிப்பாளரான வானியலாளர் ஜெனடி போரிசோவைக் கௌரவிக்கின்றது.



# மாநிலச் செய்திகள்

## இந்தியக் குடியரசுத் தலைவரின் வண்ணங்கள் என்ற கௌரவம் - குஜராத் காவல்துறை

- இந்த கௌரவத்தைப் பெற்ற நாட்டின் 7வது காவல் துறையாக குஜராத் காவல்துறை உருவெடுத்துள்ளது.
- இந்தியத் துணைக் குடியரசுத் தலைவரான எம்.வெங்கையா நாயுடு குஜராத் காவல் துறைக்கு 'குடியரசுத் தலைவரின் வண்ணங்கள்' என்ற கௌரவத்தை வழங்கினார்.
- அணிவகுப்பு உள்ளிட்ட சிறப்பு விழாக்களின் போது குஜராத் காவல்துறையினர் தனது சீருடையின் இடது தோளில் குடியரசுத் தலைவரின் வண்ணத்தை (ஒரு சின்னம்) அணிவார்கள்.

***குடியரசுத் தலைவரின் வண்ணங்கள் என்ற கௌரவம்***

- சமூகத்திற்கு காவல்துறையினர் அளித்த மிகப்பெரிய பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக ஒரு காவல் துறைப் படையினருக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த மரியாதை இதுவாகும்.
- குடியரசுத் தலைவரின் வண்ணங்கள் 'நிஷான்' என்றும் அழைக்கப் படுகின்றன.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இந்திய அமைதிப் படையினருக்கு ஐக்கிய நாடுகள் விருது

- தெற்கு சூடானில் பணியாற்றும் சுமார் 850ற்கும் மேற்பட்ட இந்திய அமைதிப் படையினரின் அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்திற்காக ஐக்கிய நாடுகளின் மதிப்பு மிக்க விருது அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்காக அதிக அளவிலான வீரர்களை அனுப்பும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.
- தற்போது, தெற்கு சூடானில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைதித் திட்டத்தில் 2,342 இந்தியத் துருப்புக்கள் மற்றும் 25 காவல் துறைப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## தெற்காசிய இலக்கியத்திற்கான DSC பரிசு 2019

- ஆசிரியர் அமிதாபா பாக்சி என்பவர் தனது 'பகுதி இரவுப் பொழுது கழிந்து விட்டது' என்ற நாவலுக்காக 2019 ஆம் ஆண்டின் தெற்காசிய இலக்கியத்திற்கான DSC பரிசை வென்றுள்ளார்.
- இந்த விருது தெற்காசியப் பிராந்தியத்தின் இலக்கியங்களை அங்கீகரிக்கின்றது.

- இது 2010 ஆம் ஆண்டில் அதன் நிறுவனர்களான சூரினா நருலா மற்றும் மன்ஹாத் நருலா ஆகியோரால் நிறுவப்பட்டது.
- DSC பரிசின் செயலகமானது புது தில்லியில் அமைந்துள்ளது.

### IMTJ மருத்துவப் பயண விருதுகள் 2019

- சென்னையில் உள்ள அப்பல்லோ சிறப்புப் புற்றுநோய் மருத்துவமனையானது இந்த ஆண்டின் சர்வதேசப் புற்றுநோய் மையத்தின் கீழ் உள்ள ஒரு விருதை வென்றுள்ளது.
- இந்த விருதுகள் மருத்துவப் பயணம், மருத்துவச் சுற்றுலா மற்றும் சுகாதார சுற்றுலாத் துறை ஆகியவற்றில் உள்ள புதுமை மற்றும் சிறப்பை அனுசரிக்கின்றன.
- மருத்துவப் பயணம் மற்றும் மருத்துவச் சுற்றுலா ஆகியவற்றின் மீதான ஆர்வம் அதிகரித்து வருவதற்கு ஆதரவளிக்கும் வகையில் 2007 ஆம் ஆண்டில் IMTJ நிறுவப் பட்டது.
- 2019 ஆம் ஆண்டின் IMTJ மருத்துவப் பயண விருதுகளின் வெற்றியாளர்கள் பெர்லினில் அறிவிக்கப் பட்டனர்.

## முக்கிய தினங்கள்

### சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம் - டிசம்பர் 18


- ஐக்கிய நாடுகளோடு தொடர்புடைய ஒரு நிறுவனமான புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பின் மூலம் இத்தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- இத்தினத்தின் கருத்துரு, "#WeTogether" என்பதாகும்.
- 1990 ஆம் ஆண்டில் இந்த நாளில், புலம்பெயர்ந்த அனைத்துத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒப்பந்தத்தை ஐக்கிய நாடுகள் ஏற்றுக்கொண்டது.




### இந்திய சிறுபான்மையினர் உரிமைகள் தினம் - டிசம்பர் 18

- இத்தினமானது இந்தியாவில் உள்ள அனைத்து சிறுபான்மையினர் சமூகங்களின் மத நல்லிணக்கம், மரியாதை மற்றும் சிறந்த புரிதல் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது.

- சிறுபான்மையினர் உரிமைகள் தினமானது தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தினால் (National Commission for Minorities - NCM) அனுசரிக்கப் படுகின்றது.
- மத்திய அரசு தேசிய சிறுபான்மையினர் ஆணையச் சட்டம், 1992ன் கீழ் NCM என்ற ஆணையத்தை அமைத்துள்ளது.
- இந்தியாவில் உள்ள மதம் சார்ந்த ஆறு சமூகங்கள், அதாவது முஸ்லிம்கள், கிறித்தவர்கள், பௌத்தர்கள், பார்சிகள் மற்றும் சமணர்கள் ஆகியோர் இந்தியாவில் சிறுபான்மையினர் சமூகங்களாக அறிவிக்கப் பட்டுள்ளனர்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★